
# பேராசிரியர்களுக்கான 'ஸ்வயம்' பயிலரங்கு

திருச்சி,மே 8–

*திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகத்துறை மற்றும் பல்கலைக்கழக மானியக்குழுவின் மனிதவள மேம்பாட்டு மையம் சார்பில் பல்கலைக்கழக பல்வேறு துறை பேராசிரியர்கள், உறுப்புக்கல்லூரிகள், இணைவு பெற்ற கல்லூரி பேராசிரியர்களுக்கான, ஆற்றுப்படுத்தல் குறித்த 'ஸ்வயம்' ஒருநாள் பயிலரங்கம் நடந்தது.*



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் மணிசங்கர் தலைமையில் 'ஸ்வயம்' பயிலரங்கம் நடந்தது

பல்வேறு பாடங்களை கற்று சான்றிதழ், பட்டயம்,இளங்கலை, முதுகலை பட்டங்கள் பெறவதற்கான மத்திய அரசின் போர்ட்டல் 'ஸ்வயம்'. இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பயிலரங்கத்தை பல்கலைக்கழக துணைவேந்தர் மணிசங்கர் தொடங்கி வைத்தார்.

தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவன பேராசிரியர் மல்லிகா, பல்கலைக்கழக தர கட்டுப்பாட்டு மைய ஆலோசகர் பேராசிரியர் செல்வம் ஆகியோர், ஸ்வயம் குறித்தும், கற்றல் வளங்கள், இணையம் சார்ந்த பாடப்பிரிவுகளை மாணவர்களுக்கு வழங்குவது, அதற்கான மத்திய அரசு நிதி ஆகியவை குறித்து பேசினர்.

தேசிய உயர்கல்வி தரவரிசை மற்றும் உயர்கல்வி ஆராய்ச்சி குழுமங்கள், இணைய வழி கற்றல் முறைகளை அளிப்பது குறித்தும் பயிலரங்கில் விரிவாக பேசப்பட்டது. பயிலரங்கில் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள் பேராசிரியர்கள் மணலி சோமசுந்தரம், பேராசிரியர் சிவராமகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

பாரதிதாசன் பல்கலைக்கழக மேலாண்மைப் பள்ளி பேராசிரியர் ரவிச்சந்திரன் நிறைவுரை ஆற்றினார். நூற்றுக்கணக்கான பேராசிரியர்கள் கலந்துகொண்டனர். நூலகத்துறை தலைவர் சீனிவாசராகவன் வரவேற்றார்.

பல்கலைக்கழக மானியக் குழு மனிதவள மேம்பாட்டுத் துறை இயக்குனர் செந்தில்நாதன் நன்றி கூறினார்.